**ஹாவார்ட் பல்கலைக்கழகம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினதும் வணிகத் திணைக்களத்தினதும் அலுவலர்களுக்காக இணைய வழி ஊடாக பொருளாதார இராஜதந்திர கற்கைநெறியினை நடாத்துகின்றது**

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பொருளாதார இராஜதந்திர வகிபாகத்தின் பகுதியொன்றாக இலங்கையின் குறித்த பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் சவால்களுக்கு ஈடுகொடுப்பதற்கும் இணைய வழி ஊடான பொருளாதார இராஜதந்திர கற்கைநெறியினை வடிவமைப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் அமைச்சு தனித்துவமான முயற்சியொன்றினை எடுத்துள்ளது. இக்கற்கை நெறியானது வணிகத் திணைக்களம் மற்றும் உலகின் மிகவும் கௌரமிக்க பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஹாவார்ட் பல்கலைக்கழகம் என்பவற்றுடனான வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கூட்டுமுயற்சியின் பிரதிபலனாக அமைகின்றது.

பதில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ ஹர்ஷ டி சில்வா அவர்களின் தலைமையில் 2017 மார்ச் 7 ஆம் திகதியன்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இக் கற்கை நெறி வைபவரீதியாக ஆரம்பித்த வைக்கப்பட்டது. வணிகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சோனாலி விஜேரத்ன, ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான நிலையத்தின் (HCID) சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் மாற் அன்றுவ்ஸ் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களும் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களும் இந் நிகழ்வில் பங்கேற்றனர்.

குறித்த தேவைகளை நிறைவேற்றுகின்ற கற்கநெறியொன்றினை வடிவமைப்புச் செய்வதில் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின சர்வதேச அபிவிருத்திக்கான நிலையம் முதலாவது ஈடுபடுகின்ற நாடான இலங்கையில் இக் கற்கை நெறியினை இந் நிலையம் வழங்குவது இதுவே முதற் தடவையாகும்.

பதில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இந் நிகழ்வில் உரையாற்றும் போது ஏற்றுமதிகள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை கவருதல் போன்ற விடயங்களில் இலங்கையானது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளை விட பின்தங்கி காணப்படுவதாகவும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பேராவல் மிக்க பொருளாதார இலக்குகளை எய்துவதற்கு எமது முயற்சிகளை மீள ஊக்கப்படுதவது இன்றியமையாததாக காணப்பட்டது எனவம் குறிப்பிட்டார். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரங்களின் பிரதானிகளுக்கும் வர்த்தக அலுவலர்களுக்கும் வெளிநாட்டு அரசாங்கங்களுடனும் தனியார் துறைக் கம்பனிகளுடனும் நேடியாக தொடர்பு கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதனால் அவர்கள் இது தொடர்பில் மிக முக்கிய பங்காற்றுகின்றனர். இலங்கையின் வாய்ப்புகளைய்யும் இயலாற்றல்களையும் பயன்படுத்தவதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். ஏற்றுமதிகளையும் வெளிநாட்டு நேரடி முதலீடுளையும் ஊக்குவிக்கின்ற அரசாங்கத்தின் கொள்கைகளை ஊக்குவித்து தலைமை வகிப்பதற்கு முயற்சிகளை சுயமாக தொடங்கிச் செயற்படுவதற்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் இராஜதந்திர அலுவலர்களை இயலச் செய்வதனை இக் கற்கை நெறி இலக்காகக் கொள்கின்றது.

இக் கற்கைநெறியானது 18 வார கால அளவினைக் கொண்டதுடன் அலுவலர்கள் தமது நாளாந்தப் பணிகளில் ஈடுபடகின்ற அதேவேளை அவர்கள் கற்கின்றனர் என்பதனை உறுதி செய்யும் பொருட்டு செயற்பாட்டினை நோக்காகக் கொண்ட செயன்முறைப் பாடங்களை உள்ளடக்குகின்றது. தெரிவு செய்யப்படும் பங்குபற்றுனர்கள், வெளிநாடுகளில் உள்ள 15-20 இலங்கைத் தூதரகங்களிலும் கொழும்பிலும் உள்ள தூதரங்களின் பிரதானிகள் மற்றும் வர்த்தக அலுவலர்கள் உள்ளடங்கலாக சுமார் 35-40 அரசாங்க அலுவலர்களாகும்.

இலங்கையின் ஏற்றுமதித் துறையினை பல்வகைப்படுத்துவதில் அது எதிர்கொள்கின்ற சவால்களை வணிகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சோனலி விஜேரத்ன எடுத்துக்காட்டினார். பேராசிரியர் மாற் அன்றுவ்ஸ் இந்நிகழ்வில் உரையாற்றம் போது வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு தமது வெளிநாட்டு தூதரகங்களை செயல்திறன் மிக்கவாறு பயன்படுத்துவதற்கு இயலுமாகவிருந்த நாடுகளை எடுத்துக்காட்டினார். இலங்கையின் வாய்ப்புகளை செயல்திறன்மிக்க விதத்தில் சந்தைப்படுத்துவதற்கு அலுவலர்களை இயலச் செய்யூம் திறன்கள்,அறிவு மற்றும் இயலுமைகள் என்றபவற்றை புகட்டுவதில் இக்கற்கை நெறி மிகவும் வேண்டப்படுகின்றது எனச் சுட்டிக்காட்னார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2017 மார்ச் 07